
# நாம் விசுவாசிப்பது



# நாம் விசுவாசிப்பது

ICI Nearest Centre
ICI UNIVERSITY
1ST FLOOR, 1/62/14 RAVI COLONY, ST. THOMAS
MOUNT, CHENNAI - 600016
PHONE : +91-44-4351 9774
Email : iciuniversitymdrs@gmail.com

© 1985 All Rights Reserved

ICI Nearest Centre
ICI UNIVERSITY
1ST FLOOR, 1/62/14 RAVI COLONY, ST. THOMAS
MOUNT, CHENNAI - 600016
PHONE : +91-44-4351 9774
Email : iciuniversitymdrs@gmail.com

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முதலாவதாக, நாம் சற்று உரையாடுவோம் .... | 5 |
| பாடம் | | |
| 1. | வேதாகமம் .... | 9 |
| 2. | தேவன் .... | 14 |
| 3. | மனிதன் .... | 21 |
| 4. | பாவம் .... | 28 |
| 5. | இயேசு கிறிஸ்து .... | 36 |
| 6. | இரட்சிப்பு .... | 47 |
| 7. | பரிசுத்தாவியானவர் .... | 59 |
| 8. | சபை .... | 64 |
| 9. | ஆவியின் உலகம் .... | 71 |
| 10. | வருங்காலம் .... | 78 |
| 11. | தேவனுடைய நியாயப் பிரமாணம் .... | 86 |
| 12. | தேவனோடுள்ள நமது ஐக்கியம் .... | 96 |
| 13. | மற்றவர்களோடுள்ள நமது ஐக்கியம் .... | 103 |
| 14. | ஒரு கிறிஸ்தவனும் தனது வாழ்க்கையும் .... | 112 |
| 15. | கிறிஸ்தவ ஜீவியம் .... | 120 |
| 16. | ஆவியினால் நிரப்பப்பட்ட ஜீவியம் .... | 132 |
| * | இறுதி வினாத்தாள் | |

# முதலாவதாக, நாம் சற்று உரையாடுவோம்

கிறிஸ்தவர்கள் எதை விசுவாசிக்கின்றனர் என்னும்கேள்வி எப்பொழுதாகிலும் உங்கள் மனதில் உதித்ததுண்டா? நீங்கள் இவ்வாறு விசுவாசிப்பதின் காரணம் என்ன என்று கேட்ட நண்பர்களுக்கு சரியான பதில் கொடுக்க இயலாமல் தவித்த சந்தர்ப்பங்கள் உங்கள் வாழ்வில் ஏற்பட்டதுண்டா? அப்படியானல் இப்புத்தகம் உங்களுக்காகவே எழுதப் பட்டது.

இப்பாடத்திட்டத்தில் வேதாகமத்தின் முக்கிய உபதேசங்கள் அடங்கியுள்ளது. அதனை நாம் அடிப்படை உபதேசங்கள் என அழைக்கிறோம். நீங்கள் இவைகளை படிப்பதின் நோக்கம் கேள்விகளுக்கு பதில் அளிப்பது மட்டுமன்றி, உங்கள் வாழ்க்கையில் ஏற்பட கூடிய பல காரியங்களை குறித்து தேவன் என்ன சொல்கிறார் என்பதை அறிந்து, கொள்ளுவதுமாக இருக்க வேண்டும்.

நீங்கள் படிக்கும், மனப்பாடம் செய்யும் வேத வசனங்கள் உங்களை ஆவிக்குரிய முறையில் வளரச் செய்யும். அவைகள் உங்கள் தனிப்பட்ட தியானத்திற்கும், மற்றவர்களோடு சுவிசேஷத்தை அறிவிப்பதிலும், மற்றவர்களுக்கு வேதாகமத்தை கற்று கொடுக்கவும் உதவிசெய்யும். வசனத்தை அறியும் அறிவு விசுவாசத்தை அதிகரிக்கச் செய்யும்.

நாம் விசுவாசிப்பது என்னும் புத்தகம், நீங்கள் எங்கும் எடுத்துச் சென்று நேரம் கிடைக்கும்போதெல்லாம் படிக்கக் கூடிய முறையில் சிறிய புத்தகமாக அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொருநாளும் அதனை படிக்க நேரத்தை ஒதுக்கி வைக்கவும்.

ஒவ்வொரு பாடத்தின் ஆரம்பத்திலும் அப்பாடத்தின் நோக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பாடத்திலிருந்து நீங்கள் எதிர்ப்பார்ப்பது என்ன என்பதை நோக்கம் என்னும் வார்த்தை குறிப்பிடுகிறது. நோக்கம் என்று நாம் சொல்லும் போது இலக்கு அல்லது உத்தேசம் என்று பொருள் படும். நோக்கங்களை மனதில் வைத்து படிப்பீர்களெனில் சிறந்த முறையில் இப்புத்தகத்தை படிப்பீர்கள்.

ஒவ்வொரு பாடத்தின் முதல் இரண்டு பக்கங்களை மிக கவனமாய் வாசிக்கவும். தொடர்ந்து வரும் பகுதிகளுக்கென இது உங்கள் மனதை ஆயத்தமாக்கும். அடுத்த படியாக பாடத்தின் ஒவ்வொரு பிரிவுகளையும் கவனமாக வாசித்து நீங்கள் செய்ய வேண்டியது என்னும் பகுதிகளில் குறிப்பிட்டுள்ளவைகளை பின் பற்றவும். இப்புத்தகத்தை நீங்கள் ஒரு குழுவாக படிக்கிறீர்களெனில் அக்குழு தலைவரின் குறிப்புகளை கவனிக்கவும்.

## கேள்விகளுக்கு பதில் அளிப்பது எங்கனம்?

இப்பாடங்களில் பல முறையில் காணப்படும் கேள்விகள் உள்ளன. கீழே சில மதிரி பரிசோதனைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளை கவனிக்கவும்.

மாதிரி 1. வேதாகமத்தில் மொத்தம் அடங்கியுள்ள புத்தகங்கள்.

a) 100.

b) 66.

c) 27.

சரியான விடை b) 66 புத்தகங்கள். உங்கள் விடையில் b-ஐ சுற்றி ஒரு வட்டமிடவும்.

1. வேதாகமத்தில் மொத்தம் அடங்கியுள்ள புத்தகங்கள்.

a) 100.

(b) 66.

c) 77

சில இடங்களில் ஒன்றிற்கும் அதிகமான விடைகள் சரியாய் காணப்படும். அங்கெனமெனில் அவைகளுக்கு முன் காணப்படும் எழுத்துக்களை சுற்றி வட்டமிடவும்

மாதிரி 2. கீழ்காண்பவற்றுள் சரியான விடைகளைகுறிப் பிடவும்

a. வேதாகமத்தில் மொத்தம் 120 புத்தகங்கள் அடங் கியுள்ளன.

b. வேதாகமத்தில் இன்றும் விசுவாசிகளுக்குரியசெய்தி யடங்கியுள்ளது.

c. வேதாகம எழுத்தாளர்கள் அனைவரும் எபிரேய மொழியில் எழுதினர்.

d. வேதாகம எழுத்தாளர்கள் பரிசுத்தாவியினால் ஏவப் பட்டனர்.

இவைகளுள் b-யும், d-யும் சரியான வாக்குமூலங்கள் ஆதலால் அவைகளை சுற்றி வட்டமிடவும்.

ஒன்றோடொன்றை இணைக்கவும் என் னும் கேள்வி பகுதி யில் உள்ள பெயர்களோடு அதை குறித்த விளக்கம் வேதா கமத்தில் எந்த புத்தகத்தில் அப்பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்பவற்றை குறிப்பிடுவதாகும்.

மாதிரி 3. எந்த தலைவன் என்ன காரியத்தை செய்தான் என்பதை சரியாய் இணைக்கவும்.

........ a. சீனாய் மலையில் நியாய
பிரமாணத்தை பெற்றவன். 1. மோசே.

........ b. இஸ்ரவேலரை யோர்தான்
கடக்க செய்தவன் 2. யோசுவா.

........ c எரிகோவை சுற்றியவன்.

........ d. பார்வோனின் அரண்மனையில்
வசித்தவன்.

பதில் a- யும், d–யும்மோசேயை குறிப்பிடுகின்றன

b- யும், c-யும் யோசுவாவை குறிப்பிடுகின்றன